25.10.2017

தி இந்து
தமிழால் இணைவோம்

# வடகிழக்கு பருவமழை வியாழக்கிழமை தொடங்க வாய்ப்பு: சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்



அடுத்த 24 மணி நேரத்தில் வடகிழக்கு பரவமழை தொடங்குவதற்கான சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறுகையில், "அடுத்த 24 மணி நேரத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது.

உள் தமிழகத்தில் நிலவி வந்த வளி மண்ட மேலடுக்கு சுழற்சியும், தென்மேற்கு வங்கக் கடலில் நிலவி வந்த மேலடுக்கு சுழற்சியும் இணைந்து தற்போது, தென் தமிழகம் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் நிலவி வருகிறது. அதன் காரணமாக அடுத்த 24

மணி நேரத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்" என்று அதிகாரிகள் கூறினர்.

நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழை விலகிவிட்டது குறிப்பிடத்தக்கது.

## வடகிழக்கு பருவமழை நாளை தொடங்குகிறது: இந்த ஆண்டு இயல்பான மழை இருக்கும்



தமிழகத்துக்கு அதிக மழைப் பொழிவைத் தரும் வடகிழக்கு பருவமழை நாளை தொடங்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் ஜூன் மாதத்தில் கேரளாவில் தொடங்கும் தென்மேற்கு பருவமழை, படிப்படியாக பிற பகுதிகளுக்கும் பரவி அக்டோபர் மாதத்தில் நிறைவு பெறும். இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழையின்போது நாட்டில் சராசரி அளவில் மழை பெய்துள்ளது.

ஆனால், அதற்கு நேர்மாறாக தமிழகத்தில் மட்டும் இயல்பைவிட 31 சதவீத கூடுதல் மழை பெய்துள்ளது. இதனால் பெரும்பாலான அணைகள் நிரம்பியுள்ளன.

இந்நிலையில், தென்மேற்கு பருவமழை இன்றுடன் முழுமையாக விடை பெறுகிறது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன் கூறும்போது, ‘‘தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை அக்டோபர் 26-ம் (நாளை) தேதி தொடங்க வாய்ப்புள்ளது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையின்போது தமிழகம், கேரளா, ராயலசீமா, ஆந்திரா, தெற்கு கர்நாடகம் ஆகிய தென் தீபகற்பத்தில் இயல்பை ஒட்டியே மழைப் பொழிவு இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது’’ என்றா